171648
071648
(26)
ජාතික ලේඛනාරක්ෂක දෙපාර්තමේන්තුව
1981 - 8 - 6
ශ්‍රී ලංකා Sri Lanka இலங்கை

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
## பாராளுமன்றம்

---

# 1981 ஆம் ஆண்டின் 26 ஆம் இலக்க
# ஊழியர் சகாயநிதி (திருத்தச்) சட்டம்

---

(1981, மே மாதம் 5 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)

அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது

---

1981 மே மாதம் 08 ஆந் தேதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

கொழும்பு, அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்

விலை : சதம் 35 தபாற் செலவு : சதம் 50

# 1981 ஆம் ஆண்டின் 26 ஆம் இலக்க ஊழியர் சகாயநிதி (திருத்தச்) சட்டம்

[1981, மே மாதம் 5 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]

ச. வ.—ஓ. 103/80
1396

1958 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க ஊழியர் சகாயநிதிச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்.

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

சுருக்கப் பெயர்.

1. இச்சட்டமானது, 1981 ஆம் ஆண்டின் 26 ஆம் இலக்க ஊழியா சகாயநிதி (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

1958 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்கச் சட்டத்தின் 10 ஆம் பிரிவைத் திருத்துதல்.

2. இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படும் 1971 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்டவாறான 1958 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க ஊழியர் சகாயநிதிச் சட்டத்தின் 10 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு மேலும் திருத்தப்படுகிறது :—

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் "ஆறு நூற்றுவீதம்" என்ற சொற்களுக்குப் பதிலாக "எட்டு நூற்றுவீதம்" என்ற சொற்களை இடுவதன்மூலம்; அத்துடன்

(2) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவில் "ஒன்பது நூற்றுவீதம்" என்ற சொற்களுக்குப் பதிலாக "பன்னிரண்டு நூற்றுவீதம்" என்ற சொற்களை இடுவதன்மூலம்.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 16 ஆம் பிரிவை மாற்றீடு செய்தல்.

3. முதன்மைச் சட்டவாக்கத்தின் 16 ஆம் பிரிவு இத்தால் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பிரிவு இடப்படுகின்றது :—

"உரிய தேதியில் உதவுதொகையைச் செலுத்தத் தவறும் தொழில்தருநர் மீது மிகைக் கட்டணம் விதித்தல்.

16. ஏதேனும் மாதம் தொடர்பில் இச்சட்டத்தின் கீழ் கொடுபடற்பாலதான உதவுதொகைகள் அதையடுத்துவரும் மாதத்தின் கடைசி நாளுக்கு முன்னராக நிதிக்குச் செலுத்தப்படாதிருந்து, அத்துடன் அத்தகைய உதவுதொகைகளைச் செலுத்தத் தவறியமை அவரது கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்டது என்று ஆணையாளர் திருப்திப்படும்படி விளக்கமளிக்க முடியாதவராயிருக்கின்றவிடத்து, தொழில்தருநர், போமதியாகவுள்ள உதவுதொகையோடு சேர்த்து மேலதிகமாக அத்தகைய தொகையின்மீது பின்வரும் விதத்தில் கணிக்கப்படும் மிகைக்கட்டணமொன்றையும் நிதிக்குச் செலுத்த ஆளாதல் வேண்டும் :—

(அ) அந்த உதவுதொகைகள் பத்து நாட்களுக்கு மேற்படாதவொரு காலத்துக்கு நிலுவையாகவிருக்கின்றவிடத்து, போமதியாகவுள்ள உதவுதொகைகளின் ஐந்து நூற்றுவீதத்தைக் கொண்ட ஒரு மிகைக்கட்டணம்;

(ஆ) அந்த உதவுதொகைகள் பத்து நாட்களுக்கு மேற்பட்டு ஆனால் ஒரு மாதத்துக்கு மேற்படாதவொரு காலத்துக்கு நிலுவையாகவிருக்

2—எ 54767—6,500 (01/81)

கின்றவிடத்து, போமதியாகவுள்ள உதவு தொகைகளின் பதினைந்து நூற்றுவீதத்தைக் கொண்ட ஒரு மிகைக்கட்டணம்;

(இ) அந்த உதவுதொகைகள் ஒரு மாதத்துக்கு மேற்பட்டு ஆனால் மூன்று மாதங்களுக்கு மேற்படாதவொரு காலத்துக்கு நிலுவையாகவிருக்கின்றவிடத்து, போமதியாகவுள்ள உதவு தொகைளின் இருபது நூற்றுவீதத்தைக் கொண்ட ஒரு மிகைக்கட்டணம்;

(ஈ) அந்த உதவுதொகைகள் மூன்று மாதங்களுக்கு மேற்பட்டு ஆனால் ஆறு மாதங்களுக்கு மேற்படாதவொரு காலத்துக்கு நிலுவையாகவிருக்கின்றவிடத்து, போமதியாகவுள்ள உதவு தொகைகளின் முப்பது நூற்றுவீதத்தைக் கொண்ட ஒரு மிகைக்கட்டணம்;

(உ) அந்த உதவுதொகைகள் ஆறு மாதங்களுக்கு மேற்பட்டு ஆனால் பன்னிரண்டு மாதங்களுக்கு மேற்படாதவொரு காலத்துக்கு நிலுவையாகவிருக்கின்றவிடத்து, போமதியாகவுள்ள உதவு தொகைகளின் நாற்பது நூற்றுவீதத்தைக் கொண்ட ஒரு மிகைக் கட்டணம்;

(ஊ) அந்த உதவுதொகைகள் பன்னிரண்டு மாதங்களுக்கு மேற்பட்டதொரு காலத்துக்கு நிலுவையாகவிருக்கின்றவிடத்து, போமதியாகவுள்ள உதவுதொகைகளின் ஐம்பது நூற்றுவீதத்தைக் கொண்ட ஒரு மிகைக்கட்டணம்.".

கடந்த காலத்தையும் உள்ளடக்கிப் பயனுறுதல்.

4. இச்சட்டத்தின் 2 ஆம், 3 ஆம் பிரிவுகளினால் முதன்மைச் சட்டவாக்கத்துக்குச் செய்யப்படும் திருத்தங்கள், 1981 சனவரி 1 ஆம் தேதியன்று வலுவுக்கு வந்துள்ளனவாகக் கருதப்படுதல் வேண்டும்.